<u>தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 -ன் படி</u>





<u>அனுப்புனர்:</u>
**N. நெல்லை கோபால்**
**மூத்த பத்திரிகையாளர்**
771/1, சாம்டவர், முனுசாமி சாலை
K.K.நகர், சென்னை 78
cell 9994478389.


<u>பெறுனர் :</u>
**1) உயர்திரு. ஆணையர் அவர்கள்**
**போக்குவரத்து துறை எழிலகம்**
**சென்னை**

**2) உயர்திரு.தகவல் வழங்கும் அலுவலர்**
**RTO அலுவலகம் - கரூர் மாவட்டம்.**

<u>பொருள் :</u>

**<u>தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 -ன் படி தகவல் வழங்குவது தொடர்பாக:</u>**

<u>அய்யா,</u>

**மேற்கண்ட முகவரியில் வசிக்கும் மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபால் -ன் பணிவான வணக்கங்கள்**

கரூர் மாவட்டம், குளித்தலை பகுதியின் RTO அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி. மீனாட்சி அவர்களின் ஊழல் முறைகேடுகள் குறித்தும், அதிகார துஷ்பிரயோகங்கள் பணிகள் குறித்து வந்த செய்தியின் தொடர்பாக, எமது ஊடகவியாளர் திரு. அரவிந்தன் என்பவர், சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று உரிய புலனாய்வுகளை செய்துவந்தார்.

மேலும், ஆய்வாளர் மீனாட்சியின் விதிமீறிய பணிகள் குறித்து ஆய்வு செய்த போது, கரூர் அலுவலகத்தில், கடந்த 18-08-2022 -ல், விதிமீறிய பணிகளை ஆய்வாளர் மீனாட்சி மேற்கொண்டிருந்த நிகழ்வுகளை கண்டு, அதனை ஒரு ஆதாரத்திற்காக புகைப்படங்களாகவும், வீடியோவாகவும் கரூர் RTO அலுவலக வளாகத்தில், நமது ஊடகவியாளரால் எடுக்கப்பட்டது.

அதனை அறிந்த ஆய்வாளர் மீனாட்சி, விபத்தின் ஆய்வறிக்கையை பெற வந்த Mrs ரோகின் WPC- முன்னிலையிலும், மற்றும் RTO அலுவலகத்திற்கு வந்த பொதுமக்கள் மற்றும் ஒட்டுனர் பயிற்சிப் பள்ளி நிர்வாகிகள் மற்றும் பல கன்சல்டன்கள் முன்னிலையில் எமது ஊடகவியாளரை அடித்து உதைத்ததோடு, செல்போன்களையும் பறித்து உடைத்ததோடு, கருர் காவல் நிலையத்திலும் அந்த ஊடகவியாளரை ஒப்படைத்து வழக்குபதிவு செய்ய சொல்லி ஒரு பொய்யான புகார் ஒன்றை திருமதி.மீனாட்சி அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான காட்சி வீடியோக்கள் மற்றும் வேறு சில ஆவணங்களும் எனக்கு நீதிமன்ற வழக்கிற்கும், மீனாட்சி மீது என்னால் பதிவு செய்யப்பட இருக்கும் காவல் நிலைய வழக்குகளை பதிவதற்காக, எனக்கு தேவைப்படும் என்றும், எமது ஊடகவியாளரை ஆய்வாளர் மீனாட்சி தாக்கிய RTO அலுவலக CCTV காட்சிகள் தேவை என ஏற்கனவே DTC மற்றும் RTO - ஆகிய தங்களிடமும் 18-08-2022-லே தொலைதொடர்பு வாயிலாக என்னால் கோரப்பட்டது.

அதே நேரத்தில் கடந்த 19-08-2022-ல் இருந்து தொடர்விடுமுறை என்பதால், CCTV - காட்சியை நேரடியாக என்னால் ஆய்வு செய்வதற்கான கோரிக்கைகளையும் கோர முடியாமல் போனது .ஆனாலும், எனக்கு 18-08-2022-ல் நடந்த சம்பவம் குறித்து CCTV - காட்சி வேண்டும் என்றும், அதனை பத்திரப்படுத்த வேண்டும் என்றும், ஆய்வாளர் மீனாட்சியால் ஆதாரங்கள் அளிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என என்னால், RTO , மற்றும் DTC - அவர்களிடமும் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை தாங்களும் அறிவீர்கள். எனவே இதுகுறித்து சில விபரங்கள் எனக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 -ன் படி தகவல் தர பணிந்து கோருகிறேன்.

1)ஆய்வாளர் மீனாட்சி குளித்தலை RTO அலுவலகத்தில் எந்த தேதியில் பணியேற்றார் என்ற விபரத்தை வழங்குவதோடு, எனக்கு பதில் அனுப்பும் தேதி வரை நாள் ஒன்றுக்கு எத்தனை Test. கள் அவரால் போடப்பட்டது என்ற முழுவிபரத்தையும் வழங்க கோருகிறேன். மேலும், அவர் பணியில் சேர்ந்த வருடம், மற்றும் அவரோடு பணிக்கு தேர்வானவர்கள் யார் யார், தற்போது அவர்கள் எல்லாம் எந்தெந்த RTO அலுவலகத்தில் என்னென்ன தகுதிக்குரிய பணிகளில் உள்ளனர் என்றும், மீனாட்சியின் SR - புஸ்தகத்தின் நகலையும் வழங்க கோருகிறேன்.

2)ஆய்வாளர் மீனாட்சியால் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை அவரது சொத்துமதிப்பின் கணக்கு காட்டப்பட்டுள்ளது என்ற விபரத்தை தெரிவிப்பதோடு, கடைசியாக அவரால் கணக்கு கணக்கு காட்டப்பட்ட வருடத்தின் விபரம் மற்றும் அதன் நகலையும் வழங்க கோருகிறேன்.

3) தற்போது குளித்தலை RTO பகுதி அலுவலகத்தில் மீனாட்சி பணியேற்ற நாளில் இருந்து, எந்தெந்த பகுதிகளுக்கு எல்லாம், எந்தெந்த தேதியில் டெபுடேசன் பணியாக அவர் சென்றுவந்துள்ளார் என்றும், அங்கு அவர் பணி செய்த மொத்த விபரங்களின் பணிகளையும், அங்கும் எத்தனை Test கள் பார்த்தார் என்ற விபரங்களோடு தேதி வாரியாகவும் FC வழங்கிய வாகனங்களின் பதிவு எண்களோடு தேதி வாரியாகவும் விபரத்தை அளிப்பதோடு,அந்தந்த வாகன நிர்வாகியின் கைப்பேசி எண்களும், அவர்களது முகவரிகளையும் வழங்க கோருகிறேன்.

4) குளித்தலை, கரூர், அரவக்குறிச்சி, மற்றும் இவர் டெபுடேசனுக்காக சென்ற பணியிடங்களில் உள்ள RTO - அலுவலகத்திற்கு உட்பட்ட, ஓட்டுனர் பயிற்சிப் பள்ளிகளின் முகவரிகள், அவர்களது கைப்பேசி மற்றும் தொலைபேசி எண்களோடு, அந்த பள்ளியின் உரிமங்கள் காலவதியாகும் தேதியின் விபரத்தையும் வழங்க கோருகிறேன்.

5) குளித்தலை RTO அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிக்குரிய பணிகளை எல்லாம், கரூர் அலுவலகத்தில் இவர் செய்வதற்கான 0/0 -க்கள் எவ்வப்போது எல்லாம்,எந்தெந்தந்த தேதிகளில் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும், அந்த உத்தரவுக்கான நகல்களை வழங்குவதோடு, அந்த உத்தரவுகள் பதிவு செய்யப்பட்ட அலுவலக ரிஜிஸ்டரின் (கோப்புகள்) நகல்களையும் வழங்க கோருகிறேன்.

6) இவர் இதுவரை கரூர் அலுவலக தலைமையிலோ அல்லது திருச்சி DTC உத்தரவின்பேரிலோ எந்தெந்த அலுவலகங்களில் பணியாற்றியுள்ளாரோ, அந்த அலுவலகத்தில் இதுவரை பதிவான, அதாவது தற்போது CCTV காட்சிகளில் உள்ள மொத்த storage களை வழங்க கோருகிறேன்.

7) CCTV காட்சிகள் பதிவாகவில்லை, CCTV யின் செயல்பாடுகள் செயலற்று விட்டது என்றால் அவைகள் எந்தெந்த தேதியில் இருந்து செயல்படவில்லை என்ற விபரத்தை வழங்குக.

8) அதனை செயல்பட வைப்பதற்காக, தாங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்னென்ன என்ற விபரத்தையும், அதற்காக தாங்கள் எடுத்த நடவடிக்கையின் ஆவணங்களின் நகலையும் வழங்க கோருகிறேன்.

9) CCTV செயல்படாது குறித்து, தங்களது தலைமை அதிகாரிகளின் கவனத்திற்கு எத்தனை முறை தாங்கள் தெரிவித்தீர்கள்? அதனை எப்படி தெரிவித்தீர்கள்? தாங்கள் பதிவு செய்து தெரிவித்ததற்கான ஆவணங்கள் என்னென்ன? அதன் விபரங்களையும், அதற்குரிய நகல்களையும் வழங்க கோருகிறேன்.

10) தலைமையிடத்தில் தெரிவித்தபின்பும், தங்களின் கோரிக்கைகளை அவர்கள் பதிவு செய்த கோப்புக்களின் விபரங்களை தெரிவிப்பதோடு, அதன் மீது தலைமை அதிகாரிகள் எவ்வப்போது எல்லாம், எந்த முறையில் நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விபரத்தோடு அதன் நகல்களையும் வழங்க கோருகிறேன்.

11) CCTV செயல்படவில்லை என்பதை ZIGMA TECHNOLOGY INDIA (P) LTD, 747 AMARA COMPLEX,SKCROAD,ERODE 638001,cell:9791933074 / 83 ஆகியோருக்கு தாங்கள் எத்தனை முறை கடிதம் அனுப்பினீர்கள், எத்தனை முறை கைப்பேசி வழியாக தகவலை தெரிவித்தீர்கள் என்ற விபரத்தை வழங்குவதோடு, தாங்கள் எப்படி "ஜிக்மா"விற்கு புகாராக தெரிவித்த ஆவணங்களின் நகலை வழங்க கோருகிறேன்.

12) "ஜிக்மா" நடவடிக்கை எடுக்காதது குறித்து, ஜிக்மா மீது புகாரை தெரிவித்து அரசு செயலர்களுக்கோ, அல்லது போக்குவரத்து ஆணையருக்கோ, அமைச்சருக்கோ எத்தனை முறை புகாரை தெரிவித்துள்ளீர்கள். புகார் தெரிவித்த நகலை வழங்கக் கோருகிறேன்.

13) கடந்த 16-08-2022-மற்றும் 17-08-2022-லும் அரவக்குறிச்சி RTO அலுவலகத்தில் பதிவான CCTV காட்சிகளின் பதிவுகளை வழங்க கோருகிறேன்

14) கடந்த 18-08-2022-ல் கரூர் RTO அலுவலகத்தில் காலையில் இருந்து அலுவலகம் மூடும் வரை CCTV-யில் பதிவான காட்சிகளை வழங்க கோருகிறேன்.

15) கடந்த 16-08-2022-ல் இருந்து எட்டாவது மாதம் இறுதி வரை மீனாட்சி பணியாற்றிய அனைத்து பணிகளின் விபரங்களை வழங்குவதோடு அதற்குரிய நகல்களையும் வழங்க கோருகிறேன்.

16)1-08-2022-ல் இருந்து எனக்கு பதில் அளிக்கும் தேதி வரை ஆய்வாளர் மீனாட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நாள் டைரி குறிப்பின் - நகலை வழங்க கோருகிறேன்.

*17) 16-08-2022 -ல் அரவக்குறிச்சி RTO -ல் FC -க்காக வந்த TN 47 S 4144-வாகனத்திற்கான புகைப்படங்கள், மற்றும் அரசுக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் ரசீதுகளில் ஆய்வாளர் கையொப்பம் இட்ட நகலை வழங்குவதோடு, அதனை ஆய்வு செய்து 16-08-2022-ல் பணி முடித்தற்கான அனைத்து ஆவணங்களையும் வழங்க கோருகிறேன். மேலும் அன்றைய தினத்தில் அங்கு பணிபுரிந்த ஆய்வாளர் யார் என்ற விபரத்தையும் அவர் எத்தனை மணிக்கு பணிக்கு வந்ததார், எத்தனை மணிக்கு அலுவலகத்தை விட்டு வெளியேறினார் என்ற விபரத்தையும் வழங்குக*

*18) 17-08-2022-ல் அரவக்குறிச்சி RTO ல் FC பார்க்கப்பட்ட TN 47 S 4144-க்கு தகுதிச்சான்றிதழ் வழங்கியதற்கான ஆவணங்களை வழங்குவதோடு, அதனை ஆய்வு செய்த அதிகாரியின் பெயர், மற்றும் அவர் கையெப்பம் இட்ட ஆவணங்களையும் வழங்க கோருகிறேன்*

*19) 16-08-2022ல் TN 47 S 4144 டாரஸ் வாகனத்திற்கு வாகன தகுதிச் சான்றிதழ் அப்ரூவல் செய்யப்படாதற்கு என்ன காரணம் என்பதை அன்றை தேதியில் (16.08.22) வாகன நிர்வாகிக்கு தெரியப்படுத்தாதின் காரணம் என்ன என்ற விபரங்களை அளிக்க கோருகிறேன்.*

*20) 16-08-2022 - ல் TN 47 S 4144 டாரஸ் வாகனத்திற்கு FC - கொடுக்கப்படாததற்கு அதாவது அப்ரூவல் செய்யாப்படாத காரணத்தை FC பார்த்த அதிகாரியால் கணினியில் ஏற்றப்பட்டதா? அதன் விபரத்தை வழங்குவதோடு அதற்குரிய நகலையும் வழங்க கோருகிறேன்.*

*21)16-08-2022-ல் TN 47 S 4144 என்ற டாரஸ் வாகனத்திற்கு FC கொடுக்கப்படாதபோது ஆய்வாளர் மீனாட்சியால் ஏன் CFRR கொடுக்கப்படவில்லை என்ற விபரத்தை வழங்கவும் பணிந்து கோருகிறேன்.*

*பணிவன்புடன்,*

***N. நெல்லை கோபால்***
***மூத்த பத்திரிகையாளர்***
***27-08-2022/9994478389.***